# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**
**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**

**சுற்றறிக்கை எண்** 5/2016 **நாள் : 10/03/2016**

**பெறுநர்**
மத்திய அமைப்பின் மாநில நிர்வாகிகள்
மத்திய அமைப்பின் அனைத்து கிளைச் செயலாளர்கள்
மத்திய அமைப்பின் மாநில செயற்குழு உறுப்பினர்கள்
மத்திய அமைப்பின் மாநில பொதுக்குழு உறுப்பினர்கள்

---

அன்பான தோழரே,

வணக்கம்,

தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின் நிர்வாகிகள், செயற்குழு கூட்டம் சென்னையில் மார்ச் -6 இல் மாநில தலைவர் தோழர் கே. விஜயன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் மின் ஊழியர் மத்திய அமைப்பின் துணைத்தலைவர் ஆர்.கருமலையான், மத்திய அமைப்பின் பொதுச்செயலாளர் தோழர் எஸ்.எஸ்.சுப்பிரமணியன், மத்திய அமைப்பின் பொருளாளர் தோழர் ஈ அந்தோணி, மற்றும் மாநில நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

கூட்டத்தலைவர் தோழர் கே.விஜயன் அவர்கள் சமீபத்தில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தல். அதில் நாம் ஆற்றவேண்டிய பணிகள், மத்திய அரசு சமர்பித்த பட்ஜெட், அதில் தனியாருக்கு அளிக்கும் பல சலுகைகள் சம்மந்தமாகவும், இந்தியநாடு முழுவதும் ஜாதீய மோதல்கள் நடைபெற்று வருகிறது. இவைகளை எல்லாம் நாம் உள்வாங்கி பணியாற்ற வேண்டியதின் அவசியத்தை விளக்கினார்.

கூட்டத்தில் கலந்து கொண்ட மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில துணைத்தலைவர் தோழர் ஆர்.கருமலையான் அவர்கள் தனது உரையில் சமீபத்தில் சமர்ப்பித்துள்ள பட்ஜெட், சம்மந்தமாக குறிப்பிட்டு பேசிய போது வருமான வரிவிதிப்புக்கு இப்போதுள்ள உச்சவரம்பை ரூபாய் 5 லட்சமாக உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கை கூட கணக்கில் கொள்ளவில்லை. வருங்கால வைப்பு நிதி சேமிப்பு கணக்கு வரி செலுத்த வேண்டும் என்ற தீய அம்சங்களை விளக்கியதோடு, மத்திய அரசு தொழிலாளிகள் மீது தொடுக்கும் தாக்குதலுக்கு எதிராக தேசம் தழுவிய போராட்டம் இல்லை என்றாலு ம், துறை வாரியாக இயக்கங்கள் நடத்த வேண்டும். மார்ச் 10-ந்தேதி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இடது சாரிகள் குறிவைத்து தாக்கப்படுகிறார்கள். சி.ஐ.டியூ. முன்னணி ஊழியர்கள்

தாக்கப்படுகிறார்கள், தமிழக தேர்தல் மக்கள் நல கூட்டணிக்கு நமது ஆதரவு போன்றவற்றை விளக்கினார்.

அடுத்த நிகழ்வாக பொதுச்செயலாளர் வேலை அறிக்கையை சென்ற செயற்குழுவிற்கு பின் நடைபெற்ற பணிகளை முன்வைத்து விளக்கினார்.

மின்வாரிய ஊழியர்களின் தேங்கியுள்ள பிரச்சனைகளான ஊதிய உயர்வு பேச்சு வார்த்தைக்கான குழு அமைத்தல், களப்பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வு சம்மந்தமாக பேச்சு வார்தையை விரைவில் முடித்து முடிவு காண வேண்டுமெனவும், அதற்கு முன்பாக இடைப்பட்ட காலத்திலேயே 10 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றிய கம்பியாளருக்கு மின்பாதை ஆய்வாளராக பதவி உயர்வு வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கும் வகையில் சூப்பர் நியூமரி மின்பாதை ஆய்வாளர் பதவிகளை உருவாக்கி பதவி உயர்வு அளித்திட வேண்டும்.

வாரியத்தால் நிர்ணயிக்கப்பட்ட இரண்டாண்டுகால முடித்த 4237 மஸ்துார்களை களஉதவியாளர்களாக நியமித்திட வேண்டும்.ஒப்பந்த தொழிளாளர்களை அடையாளங்கண்டு கூலி உயர்வும், பணி நிரந்தரமும் செய்திட வேண்டும். புதியதாக துவங்கப்பட்ட மின்வாரிய அலுவலகங்களுக்கும் பிரிவுகளில் காலியாக உள்ள பணியிடங்களுக்கும் தேவையான பகுதிநேர துப்புரவு பணியாளர் பதவிகளை அனுமதித்து நிரப்பிட வேண்டும். என்றும், அனல் மின் நிலையங்களில் உள்ள காலிப்பணி இடங்களை நிரப்புவதோடு, அங்கு பணியாற்றும் களப்பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வில் உள்ள தேக்க நிலையை அகற்றும் வகையில் புதிய பதவிகளை அனுமதித்திட வேண்டும் என்றும் கோரிக்கை வைக்கப்பட்டது.

மேலும் கணக்கீட்டுப்பிரிவு ஊழியர்களின் கோரிக்கையான காலிஉள்ள கணக்கீட்டு ஆய்வாளர் பதவிகளை இப்போதுள்ள 933 கணக்கீட்டாளர்களுக்கு பணி அனுபவ காலத்தை தளர்த்தி பதவி உயர்வு வழங்கிட வேண்டும். போனஸ் கணக்கிட நிர்ணயிக்கப்பட்ட தொகையில் உச்சவரம்பை உயர்த்தியதால் மின்வாரிய தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய மீத உள்ளதொகையை வழங்கிட வேண்டும்.

....என்பன போன்ற கோரிக்கைகளை முன்வைத்து 28.01.2016, 17.02.2016 ஆகிய தினங்களில் நடைபெற்ற மாலை நேர தர்ணா வெற்றிகரமாக நடைபெற்றுள்ளது என்றும், அந்த இயக்கத்திற்கு பின்னர் வாரியம் சில உத்தரவுகளை பிறப்பித்துள்ளது என்பன போன்றவற்றையும் பற்றி விளக்கினார்.

மின் ஊழியர் மத்திய அமைப்பின் 15 வது மாநில மாநாட்டை ஜூன் அல்லது ஜூலையில் மதுரையில் நடத்துவது என்று முடிவு செய்ததில் மாற்றி அதைத்து ஆகஸ்ட் மாதத்தில் விழுப்புரம் மண்டலம் திருவண்ணாமலையில் 4 நாட்கள் மாநாடக நடத்துவது சம்மந்தமாகவும் ஆலோசனையை முன் வைத்தார்.

மேலும் மின் ஊழியர் மத்திய அமைப்பின் 2015ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்ப்பை இறுதிபடுத்துதல், வேலூர் மின் வட்டத்தில் உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்பு குழு கிளை அமைத்தது. 2016 ஆம் ஆண்டு நாட்குறிப்பு கொண்டு வந்தது, சமீபத்தில் தொடுத்துள்ள வழக்குகள், எதிர்வரும் 13.3.2016 ஆம் ஆண்டு டெல்லியில் நடைபெற உள்ள இந்திய மின் ஊழியர் கூட்டமைப்பின் மாநில நிர்வாகிகள் கூட்டம் சம்மந்தமாகவும் விளக்கினார்.

மேலும் 2016 ஆம் ஆண்டு மே மாதத்தில் நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் கடந்த 10 ஆண்டுகளாக மாநில மின் துறையை சீரழித்த திமுக, அதிமுக ஆகிய இரு அணிகள் இல்லாத மக்கள் நலன்களை முன்வைத்து ஊழலற்ற நிர்வாகத்தை உத்தரவாதப்படுத்தும்,மக்கள் நல கூட்டணியை ஆதரிக்க வேண்டியதன் அவசியத்தையும் விளக்கினார்.

**நீண்ட விவாதத்திற்கு பின்னர் கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.**

1. மே மாதத்தில் நடைபெற்ற உள்ள தமிழக சட்டமன்ற தேர்தலில் மின்துறையை சீரழித்து மின்பற்றாக் குறையையும் நிதிபற்றாக்குறையையும் உருவாக்கிய திமுக, அதிமுக ஆகிய கட்சிகளுக்கு மாறாக மக்கள் நல தொழிலாளர் நல செயல் திட்டத்தை முன் வைத்து தேர்தல் களம் காணும் மக்கள் நல கூட்டணி வெற்றி பெற மின் ஊழியர் மத்திய அமைப்பு அனைத்து முயற்சிகளிலும் ஈடுபடுவது என்று முடிவு செய்யப்பட்டது.

2. 28.1.2016, 17.2.2016 ஆகிய இயக்கங்களுக்கு முன்னர் வைக்கப்பட்ட சில கோரிக்கைகளில் சிறிது தீர்வு கண்ட போதிலும் பெரும்பாலான கோரிக்கைகள் தீர்வுக் காணப்படாமல் உள்ளது. இதற்கிடையில் தேர்தல் அறிவிக்கப்பட்டதால் இடைப்பட்ட காலத்தில் கோரிக்கைகளின் மீது வாரியத்தோடு தொடர்ந்து பேசிடுவது, தேர்தலுக்கு பின்னர் வலுவான இயக்கத்தை நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

3. மின் ஊழியர் மத்திய அமைப்பின் 15வது மாநில மாநாட்டை எதிர்வரும் ஆகஸ்ட் 13,14,15,16 தேதிகளில் விழுப்புரம் மண்டலம் சார்பாக திருவண்ணாமலையில் நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

4. மின் ஊழியர் மத்திய அமைப்பின் 2015 ஆம் ஆண்டு உறுப்பினர் இலக்கு 31000 த்தை நெருங்குகின்ற வகையில் உறுப்பினர் எண்ணிக்கை வந்துள்ளதை பரிசீலித்து அதை முழுமையடைச் செய்யும் வகையில் மார்ச் 20ந் தேதிக்குள் கிளைகள் வசூலித்த, கைவசம் வைத்துள்ள சந்தாக்களை மாநில மையத்திற்கு அனுப்பி உறுப்பினர் சேர்ப்பை இறுதிபடுத்துவது.

5. மின் ஊழியர் மத்திய அமைப்பு முன் முயற்சி எடுத்து நடத்தும் கீழ்க்கண்ட வழக்குகளை தொடர்ச்சியாக நடத்தி முடிப்பது.

   (அ) வாரியத்தால் நிர்ணயிக்கப்பட்ட பணி அனுபவ காலத்தை முடித்த கணக்கிட்டாளர் (பயிற்சி)களுக்கு கணக்கிட்டாளராக பதவி உயர்வு வழங்குவதில் ஏற்பட்ட காலதாமதத்தை நிவர்த்தி செய்யும் வகையில் பணி அனுபவ காலம் முடித்த காலத்திலிருந்து கணக்கீட்டாளராக தேர்வு செய்யப்பட்டதாக கணக்கில் கொண்டு அந்த இடைப்பட்ட காலத்திற்கு நிலுவைத் தொகை வழங்க வேண்டும் என்ற வழக்கில் மேல் முறையீடு செய்துள்ளோம். அவ்வழக்கை தொடர்ந்து நடத்திட வேண்டியுள்ளது.

(ஆ) களஉதவியாளர் (பயிற்சி),மஸ்துாரில் இருந்து களஉதவியாளராக, ஆனவர்களுக்கு இடையில் முதன்மை பட்டியல் நிர்ணயித்திடும் போது மஸ்துாரில் இருந்து கள உதவியாளர் ஆனவர்களை மூத்தவராக, வைத்திட வேண்டும் என்ற வழக்கை பதிவு செய்து நடத்திட வேண்டும்.

(இ) 2002 ஆம் ஆண்டு வழங்கிய பஞ்சப்படி உயர்வில் 9 மாதங்களுக்கு நிலுவைத் தொகை வழங்க வேண்டும் என்ற வழக்கில் வாரியம் உச்சநீதிமன்றம் சென்றுள்ளது. அதை நாம் நடத்திட வேண்டியுள்ளது.

(ஈ) மூன்று ஆண்டு காலம்,அதற்கு மேலும் பணியாற்றிய ஒப்பந்த தொழிலாளரை கள உதவியாளராக பணி நிரந்தரம் செய்திட வேண்டும் என்ற வழக்கு 106,ஐ தொழில் தீர்ப்பாயத்தில் தொடர்ந்து நடத்தி முடிவுக்கு கொண்டு வர வேண்டும்.

(உ) டெல்லி உச்ச நீதி மன்றத்தில் நிலுவையில் உள்ள வருங்கால வைப்பு நிதி வழக்கை துரிதப்படுத்தி நடத்திடுவது

தோழர்களே,

செயற்குழுவின் எடுக்கப்பட்ட முடிவுகளை முழுமையாக அமல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுகிறோம்.

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்